

# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## (தொகுதி - 1)

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் மூ. கவிதா

முனைவர் நா. சுலோசனா

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

சாத்தூர், ஸ்ரீ இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## தொகுதி - 1

**பதிப்பாசிரியர்**
முனைவர் கோ.விசயராகவன்
முனைவர் மூ.கவிதா
முனைவர்.நா.சுலோசனா

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் (தொகுதி - 1) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் மூ.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழமொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : | |
| ISBN | : | 978-93-85165-37-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | xiv+364 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 470/- (ரூபாய் நாநூற்றி எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : | ஆய்வுக் கட்டுரைகள் |

# சங்கத்தமிழரும் அன்றாட பாவனைப் பொருட்களும்

**சாந்தினி அருளானந்தம்**
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பணப்பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
இலங்கை.

தமிழக வரலாற்றில் சங்ககாலமானது முதன்மைக் காலமாகவும், பின்வந்த காலகட்டங்களுக்கு அடிப்படையாகவும் காணப்படுகின்றது. காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களை கொண்ட இக்காலமானது பெருங்கற்காலப் பண்பாட்டின் நீட்சியாக இருந்ததை அவ்விலக்கியங்களும், தொல்லியற் சான்றுகளும் நிருபித்துள்ளன. இவற்றின்அடிப்படையில் நோக்கும்போது சங்காலத்தமிழர் வளமான இயற்கையோடிணைந்த வாழ்வியல்பண்பாட்டினைக் கொண்டிருந்தமை புலனாகின்றது. புவியியல் அமைவிடச் சூழலுக்கேற்ப சங்ககால மக்கள் தங்கள் வாழ்வியலுக்குப் பொருத்தமான அன்றாடப் பாவனைப்பொருட்களை பயன்படுத்தியிருந்தனர். சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட அன்றாடப்பொருட்கள் இன்று உருமாற்ற மடைந்தும், மறைந்தும் மறக்கப்பட்டும் வருகின்றது. அண்மைக காலம்வரை பாவனையிலிருந்த பொருட்கள் பலவற்றை இன்று தொல்பொருட்சாலைகளிலேயே காணமுடிகின்றது. அத்தோடு அப்பொருட்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களையும், இக்கட்டுரை சங்கஇலக்கியத்தினூடாக ஆவணப்படுத்த முற்படுகின்றது.

சங்ககால மக்கள் தங்கள் வாழ்விடங்களாக இல்லங்களைக் கொண்டு குடும்பமாக வாழ்கின்ற போது அவர்கள் தமது அன்றாட செயற்பாடுகளின் பொருட்டு பலவகையான பாவனைப் பொருட்களை உபயோகத்தனர். சங்க காலத்தில் சமைக்குமிடம் அட்டில் என அழைக்கப்பட்டது. சுடுகளம் என்ற சொல்லும் சமைக்கும் இடத்தையே குறித்தது(புறம்.32:1). சமைப்பதைத் தொழிலாகக் கொண்டவள் சுடுமகள் எனப்பட்டாள்(புறம்.399:1). உணவைச் சங்ககால மக்கள் புகா, புகவு என்றும் அடிசில் என்றும் குறிப்பிட்டனர். உணவுக்காகத் தீமூட்டும் இடம் அடுப்பு என வழங்கப்பட்டது. எயின் குடிமகளிர் இடிந்துபோன அடுப்பில் சமைத்த சோற்றை உப்புக்கண்டத்துடன் உண்ட செய்தியை அகநானூறு தருகின்றது(அகம்.119:8-9). புதிதாகத் திருமணமான பெண் பல கிளைகளையுடைய அடுப்பில் பாலை உலையாக வைத்து சமைத்தாள்(அகம்.141:14-15). சமைக்கும்கலம் சுடுகலமாகும்(புறம்32:1-3). சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் உணவு சமைத்தல் பிரதான செயற்பாடாக இருந்ததைக்காணலாம்.

சமையலுக்கும், வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் கலம் எனப்பட்டது. பின்வரும் சங்கப்பாடல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. ‘கன்றும் உண்ணாது, கலத்தினும்படாது நூல் ஆன் தீம்பால் நிலத்துக்கா அங்கு’(குறு.27:1),‘பெயல் நீர்க்கு என்ற பசுங்கலம் போல்’(குறு.29:2), ‘ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய திண்கமழ் தேறல்’’(புற.24:31–32), ‘வெண்ணெல் வெஞ்சோறுகலந்து எழுகலத்து ஏந்தினும் சிறிது என்றே(குறு.210:3-4) என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். உணவை உண்பதற் கலங்கள் பயன்படுத்தப்பட்டன இவை உண்கலங்கள் என்றே சங்கஇலக்கியங்களில் கூறப்படுகின்றன.இலைகளை உபயோகப்படுத்தி உணவுண்ணும் வழக்கமும் காணப்பட்டது. இரவில் செல்லும் வழிப்போக்கர்களுக்கு தேக்கிலையில் உணவு வழங்கப்பட்டது. வாழையிலை, ஆம்பல் இலை(அகம்.196:5), பனையோலை (புறம்.177:16) போன்றவற்றிலும் உணவு பரிமாறப்பட்டுள்ளது. மேலும் தராதரத்திற்கு ஏற்றவகையில் உலோகங்களால் ஆக்கப்பட்ட கலங்களும் பாவனையிலிருந்தன. அரசர்கள், செல்வந்தர்கள், உயர் பதவியிலுள்ளோர். பொன், வெள்ளியிலான உண்கலங்களை பயன்படுத்தியிருந்தனரெனலாம். சோழமன்னன் கரிகாலனின் அரண்மனைப் பணிப்பெண்கள் அரசனுக்கும் அவனது விருந்தினர்களுக்கும் பொற்கலத்தில் கள்ளை ஊற்றிக் கொடுத்தனர். செம்பினால் செய்யப்பட்ட பாத்திரங்களும் பாவனையிலிருந்தன. செம்மை நிறுத்து வாங்கி, பானை முதலான பாத்திரங்களைச்

செய்வதற்கு மண்ணால் உரு செய்து செம்பை உருக்கி வார்த்து அமைப்பர் (மதுரை.514). உலோகத்தால் செய்த பாத்திரங்களைக் கடைந்து அழுத்தம் கொடுப்பர்(நற்.153:2-3).இச்செய்திகள் சங்க காலத்தில் செம்புப் பாத்திரங்கள் புழக்கத்தில் இருந்ததைத் தெரியப்படுத்துகின்றன.

மண்ணினால் ஆக்கப்பட்ட மட்பாண்டங்கள் சங்ககாலத்தில் அதிகமாகக் காணப்பட்டன. கைகளினால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள் காலப்போக்கில் சக்கரங்களின் துணையுடன் ஆக்கப்பட்டன. குறிப்பாக திகிரி என்னும் கருவியின் உதவியினால் பல்வேறு மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்டன(சண்முகம்பிள்ளை:மு.,(1997)ப.104). சங்ககாலத்திற்கு முற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டில் ஏராளமான மட்பாண்டங்கள் கிடைக்கப்பெறுகின்றன. மட்பாண்டங்களில் தொழிநுட்பம், கலை, எழுத்து என்பவற்றின் வெளிப்பாடுகளும் பெருங்கற்காலத்தினை தொடர்ந்து சங்ககாலத்திலும் நீட்சி பெற்றிருந்தன. சிறப்பாக மண்ணால் ஆக்கப்பட்ட தாழிகளை உருவாக்குதலும் அதனுள் இறந்தோரை ஈமஅடக்கம் செய்வதும் சங்கக்காலத்திலும் தொடர்ந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. மட்பாண்டங்கள் செய்வோர் கலஞ்செய்கோ (புறம்.228:1), வேட்கோ(புறம்.256:1,32:3) எனச் சுட்டப்படுகின்றனர். பொதுவாக மட்கலங்கள் செய்யப்பட்டு சூளையில் சுட்டுப் பதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் மட்பாண்டங்களில் குழிசி எனப்பட்டவை பொதுவாகப் பானை என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளதெனலாம். 'அட்ட குழிசிசுழற் பயந்தா அங்கு' (புறம்.237:7), 'முரவுவாய்க்குழிசி முரி அடுப்பு ஏற்றி' (பெரும்.98)'சோறுகூடு குழிசி இளக',(பெரும்.366) என்ற வரிகளை நோக்கும்போது பானையைசுட்டியிருப்பது புலனாகின்றது. இவை சோறு சமைக்க, தயிர்கடைய, மதுவைப்பாதுகாக்க,உபயோகிக்கப்பட்டன. குழிசி மானின் இறைச்சி சமைக்கப்பட்ட பாத்திரத்தை குறித்ததை'மான்தடி புழுக்கிய புலவு நாறு குழிசி' (புறம்,168-9) என்பதிலிருந்து அறியலாம். அதன்தோற்றத்தை 'முரவு வாய்க்குழிசி'(பெரும்:.98)'கயிறு பிணிக்குழிசி' (அகம்.77:9) போன்ற தொடர்கள் தெரியப்படுத்துகின்றன. ஆயினும் நேரடியாகவே பானை என்ற சொல்லும் சங்க

இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளமையும் எடுத்துக்காட்டத்தக்கது. 'குத்தித் தீட்டிய வரகரிசியினை சுனை நீர் கொண்ட பானையிலிட்டுச் சமைத்ததாக'' அகநானூறு கூறகின்றது. (அகம் 393:3,10-17). ஒரு பொருளைப் பல சொற்கள் கொண்டு அழைப்பதன் அடிப்படையில்

பானை, குழிசி 'என்பன புழக்கத்தில் இருந்ததெனலாம்.

குடம் என்பதும் சங்க இலக்கியங்களில் அன்றாட பாவனைப் பொருளாக இருந்துள்ளதை அவதானிக்கலாம். 'சூல்வயிற்றன்ன நீலப்பைங்குடம்' (பெரும்பாண் 380 – 382) புதிதாக திருமணமான பெண்களுக்கு முதுபெண்டிர் குடங்களும் கலங்களும் வழங்கினர். சாற்றைச் சொரிகின்ற குடம் போல என நற்றிணை கூறும்(335:2-6). நெல், வரகு போன்ற தானியங்களைச் சேமிக்கவும் குடம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிழா எனப்பட்ட மட்பாண்டமானது அரிசியினால் தயாரிக்கப்பட்ட கள்ளை வைப்பதற்கு ஏற்றதாக இருந்ததென்பதை 'அலையா அரிசி அம்களிற் துழலை மலர் வாய்பிழாவில் புலர ஆற்றி'என்ற பாடலில் இருந்து அறியலாம்

சங்ககாலமக்கள் பயன்படுத்திய வீட்டுப்பாவனைப் பொருட்களில் சாடி என்ற மட்பாண்ட

வகையும் இடம்பெற்றிருந்தது. 'முதிர்ந்த மதுவை உடைய சாடியைப் பேணிவைப்பாயாக' என

உலோச்சனார் என்பவர் கள் வழங்குவோனுக்கு கூறிய குறிப்புக் கிடைக்க் ப்பெறுகின்றது(புறம்.258:6-7). செருக்கு மிகுகின்ற கள்ளையுடைய சாடி போன்றவள் தலைவி என உவமிக்கப்பட்டதை நற்றிணையில் காணலாம்(நற்:295:6-7). பொதுவாக மது அருந்தும் அல்லது கள்ளைப் பேணிவைக்கும் பாத்திரமாக சாடி குறிப்பிடப்படுகின்ற போதிலும் வீட்டு முற்றத்தில் நீர் வைப்பதற்கும் சாடி பயன்படுத்தப்பட்டது(புறம்.219:1-4). அரிக்கமேட்டு அகழ்வாய்வில் இரட்டைப்பிடிச் சாடிகள் கிடைத்துள்ளமையும், கோட்டைமேட்டில் அம்போரா வகையைச் சேர்ந்த உரோமச் சாடிகள் கண்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. யாசிப்பவர்கள் மண்டை என்னும் கலத்தைப் பாவித்தனர்(புறம்.103,155) ஆயினும் ஒரு உண்கலமாகப் பலரும் உபயோகப்படுத்தியிருந்தனர். 'பாணர்

மண்டை நிறையப் பெய்ம்மார்' புறம்.115-27), 'ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை'(புறம்.179-2) என்ற செய்யுளடிகள் இதனை உணர்த்துகின்றது. சங்க காலத்தில் சட்டி 'அகல்' என்ற பெயரினால்

சுட்டப்படுகின்றது. புதிய அகலில் புலிக்கண் நிறமுடைய சூடான உணவை வெட்சி வீரர் உண்டனர்(புறம்.269: 4.5). ஒரு வீரனின் கண்ணைப் பற்றிக் கூறும்போது அகலில் இட்டுச்

சுழற்றப்பட்ட குன்றிமணி போன்று சுழலும் கண்ணையுடையவன்'(புறம்.200:4) எனக் கூறுவதைக்

காணலாம். அப்ப வணிகர் கரிய அகலில் பாகொடு கூட்டிச் செய்த நூல் போல கிடக்கும்

இடியப்பத்தை பாலில் இட்டு வைப்பர்(பெரு.377-378). மேற்படி செய்திகள் சட்டியைக் குறித்து

அகல், என்ற மட்பாண்டம் புழக்கத்தில் இருந்ததை அறியத்தருகின்றன.

தசும்பு, மடா போன்றனவும் இக்காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளன. தயிரை

உறைய வைக்க உபயோகிக்கப்பட்ட மட்பாண்டமே தசும்பு, 'சுடுமண் தசும்பின்' (நற்.84 :6)

தயிர் கொடு வந்த தசும்பும்(புறம்.33:3) என்பன இதனை உறுதி செய்கின்றன. கன்னல் என்பது

நேரத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்திய நாழிகை

வட்டிலாகும்(சண்முகம்பிள்ளை.மு,1997,ப.80). ஆனால் சிலர் நெடுநல்வாடையில் வரும் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு இதனை நீர் அருந்தும் பாத்திரம் என கூறுவர்.

பல்வேறு வகையான மட்பாண்டங்களைப் பயன்படுத்தியதைப் போலவே அன்றாட வாழ்வில் வேறு சில பொருட்களையும் பயன்படுத்தியமையை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. தானியங்களை உணவுக்கேற்ற வகையில் குற்றியும், தீட்டியும் இடித்து மாவாக்கியும் பயன்படுத்தியமையை பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவலை இடித்து உணவாக்கிய செய்தி கிடைக்கப்பெறுகின்றது. 'தொண்டி மகளிர் பசிய அவலை இடித்த வையிரம் பொருந்திய உலக்கையை நெல்வயலின் வரப்பாகிய அணையிற் கிடத்தி விளையாடினர்(சணமுகம்பிள்ளை.மு,1997,ப.34). பூண் அமைத்த உலக்கையால் அரிசியைக் குற்றிச் சமைத்த வெண்சோறு அமலை (சோற்றுத்திரள்) பற்றி சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது(சிறுபா.192-195). புல்லரிசியை சேகரித்து வரும் பாலை நிலப்பெண்கள் அவற்றை நிலவுரலில் இட்டு உலக்கையால் குற்றுவர் (சண்முகம்பிள்ளை.மு,1997,ப.68). பதிற்றுப்பத்தில் இடம்பெறும் யானையின் கால் பற்றிய வருணனையில், 'உரலைப் போன்ற கால்களையுடையது' எனக் குறிப்பிடப்படுகின்றது(பதி.43:3- 4), (குறு.232:4), (கலி.13:6). இக்குறிப்புக்கள் சங்ககால மக்கள் அன்றாட வாழ்வில் உரல், உலக்கையை உபயோகித்ததை தெரியப்படுத்துகின்றன.

இடித்து உணவை ஆக்கியதைப்போல அரைத்தும் பக்குவப்படுத்தியிருந்தனர். வரகினை பெரும்பாலும் அரைத்தும் பயன்படுத்தியமையால் அது அரைக்கப்பயன்படுத்தப்பட்ட பொருளும் வரகு திரிகை எனக்குறிப்பிடப்படுகின்றது. முல்லைநில மக்கள் உறையும் இல்லின் முன் யானையின் காலை ஒத்த திரிமரமாகிய வரகு திரிகை நட்டு நிற்கும் பந்தர் இருக்கும்' என பெரும்பாணாற்றுப்படை (பெரும்.185–187) கூறுகின்றது. தேர்க்கால் மணலை அறுத்துக் கொண்டு ஓடும் ஒலி, சுழலும் திரிமரத்தின் ஒலியை ஒக்கும் என்ற உவமையும் எடுத்தாளப்பட்டுள்ளது. தாயானவள் சுழல் மரத்திரிகையில் இட்டு உமி நீக்கிய அரிசியை,

உரலிற் பெய்து, பூண்பொருந்திய உலக்கையால் தீட்டிய அரிசியை மட்பானையில் சுனைநீரை

முகந்து வரகுச்சோறு சமைத்ததை அகநானூறு கூறுகின்றது. (அகம் 39:8,10-16)

மரத்திரிகையுடன் சுளகும் அன்றாடப் பாவனைப் பொருளாகப் புழக்கத்தில் இருந்தது. மண்ணை வெண் பழ அரிசியைப் போல திரிமரம் தேய்த்த சுளகினால் கொழித்த வரகரிசியை உலக்கையால் தீட்டியதாக அகப்பாடலொன்று தெரிவிக்கின்றது. (அகம்.393:8-11) சேம்பின் இலையாகிய சுளகில் புடைத்த (கலி 41:1-4) செய்தியையும் அறிந்துகொள்ள முடிகின்றது. குறும்பூழச்சேவல் சுளகிடையே உலர்த்தப்பட்ட வெள்ளெள்ளினை கவரந்து கொண்டது. (புறம் 221:1-3) மறைந்த கணவனுக்கு உணவு கொடுத்தல் (படைத்தல்) வேண்டி அவன் மனைவி, புழுதியாடிய

சுளகளவாகிய சிறிய இடத்தைத்துடைத்து தன் கண்ணீரால் சாணத்தைக் கொண்டு மெழுகினாள் (புறம் 249:7-14) மேலும் சுளகினை யானையின் செவிக்கு ஒப்பிட்டுக்கூறும் பாடலும் 'முறஞ்செவி வாரள முன்குகை (புறம் 339:13), (கலி 42:2) என இடம்பெறுகின்றது.

சங்ககால மக்களின் பாவனைப் பொருட்களில் உறியும் இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடிகின்றது. முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்களிடையே இதன் புழக்கம் அதிகமாக இருந்துள்ளது. பண்டங்கள் வைப்பதற்காக வீட்டில் குறிப்பாக சமையலறை அல்லது வீட்டின் உட்கூரையில் தொங்கவிடப்படும் வகையில் உறி கட்டப்படும். அது மட்டுமன்றி தோளில் சுமந்து செல்லும் வகையிலும் உறி பயன்பாட்டில் இருந்தது. வுலிய காம்பினை உடைய உறியை உடையவன் இடையன் (அகம் 274:6) பால் விற்கும் இடையன் கையில் பலகாலிட்டுப் பின்னிய உறி காணப்பட்டது. (நற்.142:2) கோவலர் கறவைக் கலங்கள் வைத்த உறியையும் தூக்கிச் சென்றனர். (கலி 106:1 -5) தோளில் உறியைச் சுமந்து சென்ற தழும்பு இடையர்களுக்கு இருந்தது. (பெரும் 171) அந்தணர்கள் நீர் கலங்களைக் கொண்டு செல்ல உறியைப் பயன்படுத்தினர். சிமிலி என்ற நூலுறிகள் பற்றியும் அறியக்கடக்கின்றது(மது.481.83)

முல்லை நிலமக்கள் பாலிருந்து தயிரைப் பெற்று அதிலிருந்து மோரைத் தயாரித்தனர். இதற்கு மத்து என்னும் உபகரணம் பயன்படுத்தப்பட்டது. ஆயர் குலப்பெண்கள் மத்தினால் தயிரைக்கடைந்து அதனைப் பானையிட்டு மெல்லிய சுமட்டின் மேல் தலையில் வைத்து தெருத்தெருவாக கொண்டு சென்று விற்பார்கள் ஆயமகள் விடியற்காலையில் மத்தினை ஒலிக்குமாறு விடுவித்த செய்தியை சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. (பெரு 155 – 158) இனிய தயிரைக் கடைந்த மத்து கன்று தன் வாயால் சுவைத்திட முற்றத்தே தொங்கியது. (அகம் 87:1-2) மேற்படி குறிப்புக்கள் மத்து சிறப்பாக ஆயரிடையே முக்கியமான பாவனைப் பொருளாக இருந்ததை எடுத்தக் காட்டுகின்றன.

ஊசி ஆடைகளை தைப்பதற்குப் பயன்படுத்திய ஒரு பாவனைப் பொருளாக இருந்துள்ளமையை சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. மாலை கோர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மகளின் கண்போன்ற செங்கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோர்த்துச் சுற்றிக்கட்டிய மாலையைத் தலைவன் அணிந்திருந்தான். (அகம் 48:8-9) அரத்தினால் இராவப்பட்ட ஊசியின் திரண்ட நுனி போன்றது செந்நாரையின் திண்ணிய பல் என உவமிக்கும் அளவுக்கு (அகம் 199:8-9) ஊசி அக்கால ம க்களிடையே புழக்கத்தில் இருந்ததைக் காணலாம்.

சங்ககால தமிழர் வாழ்வியலில் அன்றாட பாவனைப் பொருட்களில் விளக்குகளும் இக்காலத்திற்குரிய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. பலவிதமான விளக்குகளை அவை குறிப்பிடுகின்றன. பொன்தகட்டினால் செய்த அகல்விளக்கு(அகம். 19:17) பற்றி அகநானூறு கூறுகின்றது. 'செங்கந்தள் அரும்பு மலர்வது சுடரினைக் கொண்ட அகல் விளக்குப் போல தோன்றும்'(அகம். 7-8). சுடர் என்பது விளக்கினைச் சுட்டும் பெயராகவும் சங்க இலக்கியத்துள் எடுத்தாளபட்டுள்ளது. புறநானூற்றில் இடம்பெறும் 'யாமம் கொள்பவர் சுடர் நில் கதூம்'(புறம்.37:9) 'திமில் சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மகாவிசும்பின்'(புறம்.60:1-2) என்பது எடுத்துக்காட்டத்தக்கது. காலையுடைய பாண்டில் விளக்கு (நெடு.175), பாவை விளக்கு(முல்லை.85-86), ஓதிம விளக்கு(சிறுபா.317) போன்ற பல்வகைப்பட்ட விளக்குகளை சங்க தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

சங்ககாலத்தில் தமிழகத்தில் யவனர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இவர்கள் பாண்டியன் அரண்மனையில் பணியாற்றியதையும் வர்த்தகத்தில் ஈடுபட்டதையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. தொல்பொருட் சான்றுகளும் யவனநாட்டவர் தமிழகத்தில் இருந்ததையும் வர்த்தக நடவடிக்கைகளில் பங்கு கொண்டிருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றன. அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி ஆய்வுகளில் யவன நாணயங்கள்,மட்பாண்டங்கள், மதுச்சாடிகள், விளக்குகள் போன்றவை கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யவனர் தம் இல்லங்களில் ஏற்றுவதற்குரிய ஓதிம விளக்கு (அன்னவிளக்கு) தமிழர்களிடையே புழக்கத்தில் இருந்துள்ளன. பாவைவிளக்கு இவர்களால் அழகுறச் செய்து கொண்டு வரப்பட்டன. (பெரு.316 -319)

குடை வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பாக பயன்படுவது ஆயினும் கலம் என்ற சொல்லுக்கு இணையாகவும் குடை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.(சு/இ மூலம் முழுவதும் ப.) புறநானுற்றில் பனையோலையில் செய்த கலம் (புறம் 117:16) குறிப்பிட்டுள்ளது. அவல் வகுத்த பசுங் குடையான் (புறம் 352:3) என்பதில் அவல் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரத்தை சுட்டுவதாகவே அமைகின்றது. அதேவேளை அகநானூறு 'கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்'(194:7) எனக் கூறுவதும் கவனிற்பாலது.

நித்திரை செய்வதற்குப் பயன்படுத்திய பொருட்களில் தோல், பாய், கட்டில் என்பன இடம்பெறுகின்றன. தோலினால் ஆக்கப்பட்டது அதள் என அழைக்கப்பட்டது. 'அதளேனும் பாயேனும் கொடுமின்'(புறம் 317:2-4), 'மான் அதள் உண்டாயினும் பாய் உண்டாயினும் யாது உண்டாயினும் கொடுமின் வல்லே'(புறம் 317:3-4), 'அதளில் காயவைத்த தினையை கானக்கோழியும் கவுதாரியும் கவர்ந்துண்டன'(புறம் 320:10-11). உரித்த அதளினால் மிதியடி செய்தனர் (மலை 419). புலியின் அதள் படுக்கைக்கு பயன்படுத்தப்பட்டது. (அகம் 58:4). இக்குறிப்புக்கள் அதள் என்பது மிருகங்களின் தோலினால் ஆக்கப்பட்டதையும், அது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதையும் அறியலாம். கைமை நோற்ற பெண்கள் ஓலைப்பாயுமின்றிப் படுத்துறங்கினர்(புறம்.246:9) நித்திரை செய்வதற்கு கட்டிலும் புழக்கத்தில் இருந்ததை அவதானிக்கலாம். ஏழையொருவன் கயிற்றுக்கட்டில் அமைத்ததை புறநானூறு குறிப்பிடுகின்றது(புறம் :82). அரசர்கள் வேலைப்பாடமைந்த கட்டிலை பயன்படுத்தினர் (நெடு. 115-130).

முகம் பார்ப்பதற்கு உதவுகின்ற கண்ணாடி குறித்தும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் காணப்படுகின்றன. கண்ணாடியைத் துடைத்து தம் ஒப்பனையை அதிற் கண்ணுறுவர். இதனை ஆடிப்பாவையெனவும் அழைத்துள்ளனர். கண்ணாடியில் தோன்றும் உருவம் ஆடியின் முன்னின்று கையும் காலும் தூக்கினால் அதில் தெரியும் உருவமும் கையும் காலும் தூக்கும். அந்த ஆடிப்பாவை கண்ணாடியில் தோற்றும் உருவம் தலைவன் காதற்பரத்தையிடம் பெருமொழி கூறிவிட்டு, வீட்டுக்குச் சென்றதும் தலைவியின் சொற்படிநடப்பதற்கு உவமையாக கூறப்படுகின்றது.

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர் பண்பாட்டினை எடுத்துக்காட்டும் காலத்தால் முற்பட்ட இலக்கியங்களாகச் சிறப்புப் பெறுகின்றன. சங்ககால மக்களின் வாழ்வியல் பண்பாட்டில் அன்றாடப் பாவனைப்பொருட்களர்க பானை முதலான பல்வகைப்பட்ட மட்பாண்டங்களும் உரல், உலக்கை, உறி, ஊசி, மரத்திரிகை, கண்ணாடி, பாய், குடை, சுளகு, முதலிய பல பொருட்களும் இருந்ததை சங்க இலக்கியங்கள் அறியத்தருகின்றன. இன்று இப்பொருட்களில் பலவழக்கிழந்து அருங்காட்சியங்களில் மட்டுமே காணக்கூடியதாகவுள்ளது. சிலபொருட்கள் மின்சாரப் பொருளாக மாற்றம் கண்டுள்ளன. உதாரணமாக அரைப்பதற்கு திரிகைக்கு பதிலாக கிரண்டைர் பாவனையிலுள்ளது. சங்ககால மக்கள் இயற்கை பொருட்களைப் பயன்படுத்தி, இயற்கையோடிணைந்த வாழ்வினை மேற்கொண்டிருந்தனர். மண், ஓலை, தோல், மரம் போன்ற பாவனைப் பொருட்களின் மூலப்பொருளாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பொருட்களை பாவிப்பதால் உடல் உழைப்பு மேற்கொள்ளப்பட்டு, உடல் உள ஆரோக்கியமாக நம் முன்னோர் வாழந்தனர். உதாரணமாக கோபம், மன அழுத்தம் போன்றன அரைப்பது, இடிப்பது போன்ற செயற்பாடுகளால் சமநிலையடைகின்றது. இயற்கை சூழல் மாசடைந்து மனிதனது உடல் உள பாதிப்புக்கள் ஏற்பட்டு வாழ்வு கேள்விக்குறியதாக மாறிவரும் இன்றைய நிலையில் முன்னைய கால மக்களின் வாழ்வியலை மீண்டும் பின்பற்ற வேண்டியநிலை இன்று உருவாகியுள்ளதைக் காணமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. சுப்பிரமணியன்.சு.வே.,(பதிப்பாசிரியர்), (2006), சங்கஇலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2. சங்கஇலக்கியம் பொருட்களஞ்சியம், தொகு.01,02,03. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. சண்முகம்பிள்ளை.மு.,(1997), சங்ககாலத் தமிழர்வாழ்வியல், உலகத தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

4. ஜெய்கணேஷ்.பா.,மகாலட்சுமி.ம.,மகேஸ்வரி.சு.,(தொகுப்பு),(2007), சங்க இலக்கியம்: வரலாறு – மானிடவியல் - தொல்லியல், பரிசல், சென்னை.